**செ.வெ.எண்:26** **நாள்:16.03.2018**

# அரியலூர் மாவட்டத்தில் வளர்ச்சி பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்டத்தில் வளர்ச்சி பணிகள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்துறை அரசு முதன்மை செயலாளர் **திரு.K.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., (K.Phanindra Reddy I.A.S.,)** அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி இ.ஆ.ப.,** அவர்கள் முன்னிலையில் இன்று (16.03.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வேளாண்மைத்துறை, வேளாண் பொறியியல், தோட்டக்கலைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, கல்வித்துறை, கூட்டுறவு, உணவு வழங்கல் துறை, சுகாதாரத்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தேசிய பேரிடர் மேலாண்மைத்துறை, காவல்துறை, வளர்ச்சித்துறை, சுகாதாரத்துறை, தீயணைப்புத்துறை, வனத்துறை மற்றும் அனைத்துத் துறை அலுவலர்களிடம் துறைகளின் சார்பாக மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சிப் பணிகள் குறித்து மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்துறை அரசு முதன்மை செயலாளர் **திரு.K.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., (K.Phanindra Reddy I.A.S.,)** அவர்கள் கலந்தாய்வு மேற்கொண்டார்கள்.

இந்த கலந்தாய்வு கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.தனசேகரன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திருமதி.லோகேஸ்வரி, மற்றும் மாவட்ட அளவிலான அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**